எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# NEWREC

17 செப்டம்பர் 2017

பொது காலம்

24ம் ஞாயிறு

# பழி வாங்குவதை நம்பிக்கையோடு கடந்து வா



ஆண்டவரே, என் நாவுக்குக் காவல் வைத்தருளும், என் இதழ்களின் வாயிலில் காவலாளியை வைத்தருளும். என் இதயம் தீயது எதையும் நாடவிடாதேயும். தீச்செயல்களை நான் செய்யவிடாதேயும். தீயச் செயல் செய்யும் மனிதரோடு என்னைச் சேரவிடாதேயும், அவர்களோடு இனிய விருந்தினை நான் உண்ணவிடாதேயும்.

– திருப்பாடல்கள் 141:3-4

‘உனக்கு அடுத்திருப்பவர் செய்த அநீதியை மன்னித்துவிடு; அவ்வாறெனில் நீ மன்றாடும் போது உன் பாவங்கள் மன்னிக்கப்படும்’, என சீராக் நூல் கூறுகிறது. வெறுப்பு, சினம், பிளவு முதலியவற்றை முறிக்கக, மன்னிப்பு எனும் கொடை தேவை. நாம் செய்ய வேண்டியது:

- மன்னிப்பு – நீதி வழங்கும்
- சினத்தை விட்டொழிப்பது – குணமளிப்பைக் கொடுக்கும்
- இரக்கம் காட்டுதல் – மகிழ்ச்சி/ஒற்றுமையைக் கொண்டு வரும்

பணம், அதிகாரம், மருட்டல், சுரண்டல், ஆகியவற்றோடு சர்ச்சையில் மௌனம் காப்பது முதலிய நமது நடப்பு மலேசியச் சூழ்நிலையை நோக்கும் போது, நீதிக்கு மேல் பலன் கொடுக்கும் இரக்கத்தை நாடுவதற்கு நாம் முன்னெடுக்க வேண்டுமென இன்றைய வாசகங்கள் சுட்டிகாட்டுகின்றன. நமது நம்பிக்கை சிலுவையில் தொங்கிக் கொண்டிருப்பதால், நம்பிக்கை சீடர்களாக நாம் விளங்க வேண்டுமென நமது ஆயர்கள் அறைகூவல் விடுத்திருப்பது, மிகவும் பொருத்தமாக உள்ளது. ஆனால் இந்த நம்பிக்கை எப்போது இறங்கி வரும்?

இவ்வாண்டு ஜூலை மாத்ம 27ம் தேதி பாகிஸ்தானில், 12 வயது சிறுமியைக் கற்பழித்தவனின் 17வயது சகோதரியைக் கற்பழிக்கும்படி கிராமத் தலைவர்கள் உத்தரவிட்டனர். பழிக்குப் பழி வாஙகும் இந்த படலத்தில், கற்பழிப்புக்கு கற்பழிப்பு என்பது நீதியாகுமா? அந்தக் குடும்பங்களுக்குக் குணமளிக்குமா?

‘மன்னிப்பு’ என்பது தவறு நடந்த பாதகத்தின் விளைவால் ஏற்படும் ஆத்திரம், ஆவேசம், இறுதியில் பழிக்குப் பழி என்ற மனஇறுக்கத்தைப் போக்கும். இறைவார்த்தையும் (திருப்பாடல்கள்), சிலுவையும் இறையன்பை உணரச் செய்து, ஆறுதலளித்து, எதையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குபவத்தை வழங்கும்.

‘ஏழுபத்து ஏழு முறை’ எனக் கூறிய இயேசுவின் வார்த்தையில் ஏற்றுக் கொள்வதற்கான ஆவியைக் காணலாம். ஆனால் இது முட்டாள்தனம் இல்லையா? மன்னிப்புக்கு இடம் கொடுக்கா விட்டால் ஏற்படும் நிலையை இன்றைய உவமை காட்டுகின்றது. எனவே தேர்வு செய்யுங்கள். இரக்கம் காட்டி, நம்பிக்கை பெறும் உற்சாகமா, நீங்களும் தீர்ப்புக்குள்ளவதா? ஆத்திரம், வெறுப்பு, பழி வாங்கும் எண்ணம், அன்பினால் நல்லிணக்கம் காணும் உங்கள் ஆற்றலை, சக்தியை ஊறிஞ்சிவிடும்.

நாம் கேட்கும் அல்லது பார்க்கும் செய்திகளில் பெரும்பாலானவை, பொய் அல்லது பாதி பொய் கலந்த செய்திகள். அவை உள்நோக்கத்துடன் உருவாக்கப்பட்டவையாக, நமது சிந்தனையைப் பாதகமான பாதைக்கு இட்டுச் செல்லும். இறுதியில்தான், அவற்றின் உண்மை வெளிச்சத்திற்கு வரும். எந்தவொரு சமூகமும் இவ்வாறு செயல்பட்டால், கடைசியில் நகைப்புக்குரியதாகி விடும். கிறிஸ்துவின் உடலை உட்கொள்ளும் நாம், அவரது நம்பிக்கை ஒளி நம்மில் இறங்கட்டும். கர்வம், பழி வாங்கும் படலத்தால் ஏற்படும் மனஉளைச்சலை நீக்குவோம். நம்பிக்கை ஒளியை நோக்கி நகர்வோம். ✢

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio

INTERNAL CIRCULATION ONLY



## மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2017 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2017 செப்டெம்பர் (புரட்டாசி) மாதத்தின் கருப்பொருள்:*

*தன்னலத்தை மிஞ்சிய உருமாற்றத்தை அளிக்கிறது*

***மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்***

***( 1848 – 2018 )***

**பங்கு அலுவலக நேரம்:**

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடை பெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** **பொதுக்காலம் (ஆண்டு ஒன்று) 24ஆம் ஞாயிறு சனி 16-09-2017 ஞாயிறு 24-09-2017**

**சீராக் 27: 33 – 28: 9 தி.பா 102: 1-2, 3-4, 9-10, 11-12 உரோ 14: 7-9, மத் 18: 21-35**

**ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்; பொறுமையும் பேரன்பும் உள்ளவர். ( சங் 102 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 16 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. பிரான்சிஸ்) | **கோ மேட் 2 நிகழ்வு காலை 8.00 முதல் மாலை 4.00 மணிவரை** |
| ஞாயிறு | 17 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி தமிழ் (மறைக்கல்வி ஆசிரியர்கள்)<br>திருப்பலி ஆங்கிலம் (ம.கல்வி–ஆசிரியர்கள்)<br>திருப்பலி சீனமொழி<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 18 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 19 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 20 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 21 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 22 | 6.45 கா | திருப்பலி | |

**பொதுக்காலம் 25ஆம் ஞாயிறு : ( ஆண்டு ஒன்று)**

**எசாயா 55: 6 – 9 தி.பா 144: 2-3, 8-9, 8-9,10, 17-18 பிலிப் 1: 20c-24, 27a மத் 20: 1-16a**

**தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும், ஆண்டவர் அண்மையில் இருக்கிறார் ( சங் 144 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 23 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. பொஸ்கோ) | **குழந்தைகளுக்கான திருமுழுக்கு மாலை 7.00 மணி** |
| ஞாயி று | 24 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>1.00 ம | திருப்பலி தமிழ் (குடியேற்றவாசிகள்)<br>திருப்பலி ஆங்கிலம் (குடியேற்றவாசிகள்)<br>திருப்பலி சீனமொழி<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ) நடைபெறாது<br>மாலை 7.00 கம்.செபீர் (தே.மொ) | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

### 2017 செப்டெம்பர் (புரட்டாசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்

1. **ஆலய காணிக்கை** 09/10 செப்டெம்பர் ரிம: **7,178.35**
   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!
2. **கவனத்தில் கொள்ளவும்:** வார நாட்களில் ஆலய உணவு விடுதிக்கு அருகில் உள்ள வாயிற் கதவு மற்றும் பிரதான நுழைவாயிலில் உள்ள வாயிற்கதவு பாதுகாப்பு காரணங் களுக்காக மூடப்பட்டிருக்கும். தயவுசெய்து ஆலய மண்டபத்திற்கு அருகிலுள்ள வாயிற்கதவை (Gate 2) பயன்படுத்தவும்
3. **திருப்பலிக்கு முறையாக உடை உடுத்தி வருவோம். பெண்கள்:** முழங்கால் வரை உள்ள குட்டை கால்சட்டை, உடல் தெரியும்படி இருக்கும் கை இல்லாத சட்டைகள், ஜப்பான் காலணி ஆகியவற்றை உடுத்திவருவதை தவிர்க்கவும் **ஆண்கள்:** முழங்கால்வரை உள்ள குட்டை கால்சட்டை, உள்பனியன் மற்றும் ஜப்பான் காலணி ஆகியவற்றை உடுத்திவருவதை தவிர்க்கவும்

- **படைப்பிற்கு அக்கறைக் காட்டுவோம்:** லாவ்டாடோ சி பூர்வீக குடிமக்களின் தினம் - செப்டம்பர் 16 & 17.பங்கில் இதற்கான கண்காட்சி நடைபெறும். அனைத்துப் பூர்வீக குடிமக்கள் அனைவருக்கும் இறைவனின் ஆசீர் உரித்தாகுக
- **மறைக்கல்வி ஞாயிறு 17 செப்டமபர்:** விசேச ஆசீர் மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் மறைக்கல்வி ஆசிரியர்கள் அனைவருக்கும் அந்தந்த திருப்பலிகளில் வழங்கப்படும்.
- குடியேற்றவாசிகளின் ஞாயிறு: செப்டம்பர் 24,2017
  கருப்பொருள்: **குழந்தை குடியேற்றவாசிகள் பாதிப்புக்குள்ளானவர்கள் மற்றும் குரலெழுப்ப முடியாதவர்கள்**
  திருப்பலி காலை9.00

  கார் நிறுத்தும் இடத்தில் விசிடேஷன் பார்லர் முன்புறம் கண்காட்சி வைக்கப்பட்டிருக்கும். அனைவரையும் வரவேற்கிறோம். அதிச மற்றும் வட்டார பொறுப்பாளர்கள் உங்கள் இடங்களிலுள்ள குடியேற்றவாசிகளை உடன் அழைத்துவருமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- **கழிவறைகள் உபயோகத்திற்கு தயாராகிவிட்டது:** உணவு விடுதியிலுள்ளகழிவறைகள் புதுப்பிக்கப்பட்டு தயாராகி விட்டது.தயவு செய்து எப்போதும் சுத்தமாகவும் அக்கறையாகவும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

***மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்.***
சின்னப்பன் தவிடி - இறப்பு 10-09-2017
(முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!

- **கோ மேட் 2இன் வெற்றிக்காக பாராட்டுகள்:** இதற்காக ஒத்துழைத்த, உழைத்த , செபித்த அனைவருக்கும் பாராடுகள். தொடர்ந்து பிறரின் மற்றும் நம் வாழ்க்கையில் " மாற்றத்தை ஏற்படுத்துவோம்"
- **மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
  **நடனத்துடன் கூடிய விருந்து: மலேசிய தினம்** : செப் 21 (மறு நாள்பொதுவிடுமுறை)உங்களுடைய டிக்கெட்டுகளுக்கு தொடர்புகொள்ள: ஜெரோம் 109- 7908071வாங்கி ஆதரவு தாருங்கள்.
- **படைப்புகளுக்கான உலக செப நாள்:** திருத்தந்தை பிரான்சிஸ் சுற்றுசூழலுக்கு நாம் அக்கறை காட்ட வேண்டுமென்று அழைப்பு விடுக்கின்றார். (செட் 1 - அக்டோபர் 4 வரை, உலகில் வாழும் அனைத்து கிறிஸ்துவர்களையும் படைப்பிற்காக செபிக்கவும், அதைப் பாதுகாக்கவும் அழைக்கின்றார். இணையத்தின் வழியாக செபிக்கவும், குறிப்பிட்ட செயலைச் செய்ய முயற்சி எடுகவும் இந்த அகப்பக்கத்தை சென்று உங்களைப் பதிந்துகொள்ளுங்கள் http:// seasonofcreation.org/online-events/
  நிகழ்ச்சிகள்: படைப்பிற்கான செபத்தில் பங்கு கொள்ளுங்கள். உறுதிமொழி எடுத்துக்கொள்வது- லாவ்டாடோசி செயல்கள், கண்காட்சி, - திருப்பலிக்குப் பின் இதற்காக உங்களைப் பதிந்துகொள்ளுங்கள்.இதனையொட்டி, செபமும், மரம் நடும் நிகழ்வும் கம்போங் செபீரில் நடைபெறும்.
- **அக்டோபர் மாதம் - செபமாலை மாதம்** - அனைத்து அதிச க்களும் உங்களுடைய அதிசக்களில் செபமாலை பக்திமுயற்சியை மேற்கொள்ளுங்கள். சோன் பொறுப்பாளர்களின் கவனத்திற்கு: உங்களுடைய அதிச க்களில் திருப்பலிகளுக்கு ஜோன் மெய்னார்ட் அவர்களை தொடர்பு கொள்ளவும். (012-6656 411)
- **உங்களுடைய செல்லப்பிராணிகளுக்கு விசேச ஆசீர்:** (புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழா) அக் 8 மாலை 5.00 மணி. மாதா கெபியின் முன் நடைபெறும்.

- **பங்கு மேய்ப்புப்பணி கூட்டம் ( PPC) செப்டம்பர் 19,2017 இரவு 8.00**மணிக்கு வவிலிய அறையில் நடைபெறும்.
- **அருள்திரு ஜோர்ஜ் அவர்களின் அதிச இல்ல சந்திப்பு:** அதிச புனித ஏஜ்சலா(சோன் 10) செப் 20 இரவு 8.00மணி
- **சமயங்களுக்கிடையிலான உரையாடல் கருத்தரங்கு:** செப் 23(சனி) காலை8.30-மாலை5.30 வரை மினவுதல் தேவாலய மண்டபம்
- **பங்கு ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் (PCC)** செப் 26(செவ்)இரவு 8.00 மணி மினவுதல் தேவாலய மண்டபம். அனைத்துப்பணிக்குழுக்களின் பொறுப்பாளர்களின் வருகை கட்டாயம்
- **அதிச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் (BECCOT)**27 செப் (புதன்) மினவுதல் தேவாலய மண்டபம்
- **சோய்ஸ்(ஆங்கிலம் )** திருமணமாகாத 23-40 வயதுக்குள் இருக்கும் அனைத்து இளைஞர்களையும் இதில் கலந்துகொள்ள அழைக்கிறோம்.செப் 22 -24APC, கோலாலம்பூர். தொடர்புக்கு: அண்ட்ரூ (016-3366 050)(அ) அஷ்லி (0173310 275) அல்லது www.choicekl.org அக்கப்பக்கத்திற்கு செல்லுங்கள்
- **அருள்திரு ஜோர்ஜ்** அவர்கள் 29 செப் - 1 அக் வரை கத்தோலிக்க திருமணப் பயிற்சியை நடத்துவதால் (APC, கோலாலம்பூர்). பங்கில் இருக்க மாட்டார்.
- **பங்கு மேய்ப்புப்பணி பேரவை:** 15 அக்டோபர்(ஞாயிறு) பகல் 2.00 -5.00 வரை. மினவுதல் தேவாலய மண்டபத்தில் நடைபெறும்.